# இந்து

## The Hindu 02

2016 - 02


## நூற்றாண்டு கண்ட யாழ் இந்து சாரணர்




தமிழரின் தலை நிமிர் கழகமான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் குழுவானது 1916 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 4 ஆவதாக ஆரம்பிக்கப்பட்டு 2016 இல் தனது நூற்றாண்டு வருடத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. கல்லூரிக்கு மட்டுமல்லாது தாம் சார்ந்த சமூகத்திற்கான தேவையான சேவைகளை தொன்று தொட்டு முன்னெடுப்பது யாவரும் அறிந்த விடயமே.

நூற்றாண்டு வருடத்தில் தடம்பதிக்கும் நிகழ்வாக "இந்துபோறி 2016" என்ற வனப்பாசறை ஒன்றினை சிறப்பாக யாழ் இந்து திரிசாரணர் குழு நடத்தி முடித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வவுனிக்குளத்தின் அலைகரைப் பகுதியில் அமைந்துள்ள மருதங்காட்டுப்பகுதியில் செப்டெம்பர் 7-11 வரையான காலப்பகுதியில் நாடு தழுவிய சாரணச் சகோதரர்களுடன் வனப் பாசறை சிறப்புற நடைபெற்றது.

நாடு தழுவிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில் சாரணர்கள் சகோதரத்துவம் மிளிரவும் வட மாகாண சாரணர்களுக்கு சாரணியச் செயல்பாடுகளில் வளமை பெற வாய்ப்புக்களை வழங்கியிருந்தது. அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் சாரணியம் செழிப்புற வழி ஏற்பட்டிருக்கிறது. இப்பாசறைப் பகுதி நீர் நிலைகளுடன் கூடியதான வனப்பகுதி என்பதனால் சாரண செயல்பாடுகளில் முக்கியமான வெட்டவெளி வாழ்க்கை, வன வாழ்க்கையுடன் கூடிய கடல் சாரணிய செயல்பாடுகளையும் ஒருங்கே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு சாரணர்களுக்கு கிடைத்தது.

மேலும் தலைமைத்துவப் பண்பை வளர்க்கவும் திறமையானவர்களை வெளிக்கொணரவும் திட்டமிடலை விருத்தி செய்யவும் சாரணர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாக அமைந்தது. அதில் நீச்சல், படகோட்டல், சுவடுகளை இனங்காணல், காட்டினுள் நடைபயணம், வனவியல் குறியீடுகள் என சாரணியத்திற்கு அத்தியாவசியமான பயிற்சிகள் மேற்கொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

இந்துபோறியானது யாழ் இந்துக் கல்லூரிக்குரிய தனித்துவத்துடன், எமது கலாச்சார பண்பாட்டு அம்சங்களை நிலை நிறுத்தியது. யாழ் இந்துக் கல்லூரியின் இந்துபோறியானது "ஆயத்தமாய் இரு" " சேவை செய்" என்ற வாக்கினை மகுடமாக கொண்டு இயங்கும் எமது சாரணர் குழுவின் 100 வருட பாதையின் ஒரு மைற் கல்லாக அமைந்தது.

### உள்ளே...


- நூற்றாண்டு கண்ட யாழ் இந்து சாரணர் ........................ ப.1
- பரிசில் தினம் 2016 ........................ ப.1
- முத்தமிழ் விழா 2016 ........................ ப.2
- எமது செயற்பாடுகள் ........................ ப.3
- பழைய மாணவர் சங்க பாடல் ........................ ப.4


## பரிசில் தினம் 2016

எமது கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் 19.09.2016 அன்று கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ் இந்துவின் பழைய மாணவனும், இலங்கையின் தலைமை நீதியரசருமாகிய க.ஸ்ரீபவன் அவர்களும் அவரது பாரியார் திருமதி ஜெயந்தி ஸ்ரீபவன் அவர்களும் கலந்து கொண்டனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org









# மீண்டும் நம்மூர் கலைஞர்களின் பங்களிப்பில் இந்துவின்

# முத்தமிழ் மாலை 2016





யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணத்தில் பல புதிய களங்களை தடங்களை திறந்தும் பதித்தும் வருகின்றமையாவரும் அறிந்ததே. அந்தவகையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125வது ஆண்டினை முன்னிட்டு கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்கம் முற்று முழுதாக உள்ளுர் கலைஞர்களினைக் கொண்டுபிரமாண்டமாக நடாத்திய-கட்டணத்துடன் கூடிய "முத்தமிழ் மாலை-2015" நிகழ்வு பார்வையாளரினைப் பெரிதும் கவர்ந்ததுடன் தமிழ் ஆர்வலர்களை விழிவிரிக்கவும் வைத்தது குறிப்பிடத்தக்கது.

அதேபோலயாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்கம் இவ்வருடமும் "முத்தமிழ் மாலை-2016" என்ற நிகழ்வு 24.07.2016 ஞாயிறு மாலை சிறப்புற நடத்தியுள்ளது. பணத்தினை தேடி ஓடும் அவசர உலகத்தில், சின்னத்திரைக-ளிலும், நெடுந்தொடர்களிலும், சினிமாக்களிலும் மூழ்கி சுயத்தினை தொலைத்து நிற்கும் எம்மவர்களிற்கு ஒருமாற்றாக, எம் வேர்களை நினைவூட்டுபவையாக இந்நிகழ்வானது அமைந்தது குறிப்பிடத்தக்கது.

முத்தமிழ் மாலை 2016 எமது பாரம்பரிய கலையான தப்பாட்ட நிகழ்வுடன் ஆரம்பமானது. தொடர்ந்து நம் கலைஞர்களின் "உயிரிசையாகும் ஏழிசை" என்ற இசையமுதமும், ஸ்ரீ பரத முனிநடன கலையகத்தினரின் நடனநிகழ்வுகளும், கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில் தற்காலயாழ் சமூகம் எதிர்நோக்கும் சவாலினை மையப்படுத்திய தமிழ் விளையாடும் விவாத அரங்கும் அணிசெய்தன.

நிதிசேகரிப்பு நிகழ்வுகளிற்கு தென்னிந்தியகலைஞர்களை அழை-த்துவரும் இக்காலகட்டத்தில் உள்ளுர் கலைஞர்களைக் கொண்டும் சாதிக்கலாம் என்பதற்கு ஒரு முன்மாதிரியான இந்நிகழ்வு இவ்வருடமும் அரங்கம் நிறைந்த பார்வையாளர்க-ளால் நிறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற நிகழ்வுகளி-ற்கு ஆதரவளித்து ஊக்கமளிக்க வேண்டியது நம் கடமை. இது எம் கலைஞர்களிற்கு களம் அமைக்க உதவும். அத்துடன் எமது பணத்தில் நாமும் பயனடைந்து பாடசாலையும் பயனடையும் என்பது குறிப்பிடத்தக்கது. இம்முறை போல் தொடர்ந்து வரும் காலங்களில், வருடாவருடம் இந்நிகழ்வு சிறப்புற நடைபெற அனைவரும் பூரண ஒத்துழைப்பினை நல்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது செயற்பாடுகள்

## கல்விக்கான நடைபவனி



92 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்களினால் கல்வி முன்னேற்றத்திற்கான "Race for Education" நிகழ்வை யாழ்மாவட்டத்தில் அறிமுகம் செய்வதற்கான நடைபவனி பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் கல்லூரிச் சமூகத்தின் அனுசரணையில் 30.07.32016 காலை நடைபெற்றது.

## பழைய மாணவர் சங்க துடுப்பாட்ட அணி



மத்தியகல்லூரியின் 200 ஆவது ஆண்டையொட்டி இடம்பெற்ற பழையமாணவர் சங்கங்களுக்கிடயான நட்புறவுக்கிண்ண துடுப்பாட்டப் போட்டியில் பங்குகொண்ட எமது சங்க துடுப்பாட்டஅணி

## இலத்திரனியல் ஓட்ட பலகை




எமது பழைய மாணவனும் உதயன் குழும நிர்வாக இயக்குனருமான கௌரவ ஈ. சரவணபவன் அவர்களின் நிதிப்பங்களிப்பில் எமது கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலுக்கான இலத்திரனியல் ஓட்டப் பலகை எமது நிர்வாகக் குழுவினரால் கல்லூரியின் பிரதி அதிபர் திரு நிமலன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

## பழைய மாணவர் சங்க அடையாள அட்டை




எமது சங்க அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ள எமது அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்

## விடுதி மாணவர்களுக்கான மகிழ்வளிக்கும் மாலைப்பொழுது






விடுதி வாழ் மாணவர்களை மகிழ்வளிக்கும் மாலைப்பொழுது எமது சங்க ஏற்பாட்டில் நடைபெற்றது




வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் டிசம்பர் 10ம் திகதி நடைபெறவுள்ளது. நுழைவுச் சீட்டுக்களைப் பெற தொடர்பு கொள்ளவும்.
0772009295
0777222600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பழைய மாணவர் சங்கப் பாடல்

என் தாய் நீ
தெய்வத் தாய் - என
எனக்கே நீ
உணரவைத்தாய்


உயிர் நாடி யாழ் இந்து
உனை நாடி
இணைவோமே - தாய்ச் சங்கம்
தனை நாடி

பொங்கு தமிழிவள்
எங்கள் உலகிவள்
எமை என்றும் ஆழ்பவள்
தாயுமானவள் - யாழ்
இந்து என்பவள்
ஆன்மீக அறிவியல் போர்ப்பள்ளி
தேசத்தின் தன்மான விடிவெள்ளி...

முழுமையான பாடலை எமது சங்க இணையத்தளத்தில் செவிமடுக்கலாம்.

## குறும்படப்போட்டி 2016

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்



ஆவணப்படம்

இந்துவின் பெருமைகளும் மகிமைகளும்
இந்துவின் வரலாற்றுச் சம்பவங்கள்

குறும்படம்

இந்துவின் மைந்தர்களின் வரலாறு
இந்துவின் உருவாக்கத்தின் இலக்கு

யாழ் இந்துவின் மாணவர்கள் பழைய மாணவர்களுக்குரியது !!

த.சிவரூபன் 0777 222 600
கோ.ரஜீவ் 077 200 9295
த.சுஜீவன் 078 325 7558

To Download this tone as your ringIN Tone, dial the below IDs

Dialog 8754278
airtel 8880066848
HUTCH 369926029

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org